போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தான் சொல்ல எழுந்தார். அப்போது 55-ல் கொடுத்த உறுப்பினர்களுக்கு மட்டும்தான் பேச உரிமை உண்டு என நீங்கள்தான் குறுக்கிட்டுச் சொன்னீர்கள்.

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : He wanted to make a Speech அவர் பேச முற்பட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரை நான் பேச அனுமதிக்கவில்லை. அவரை அனுமதிக்காதபோது (குறுக்கீடு) அவரை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) அவரை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை, ஆளுங்கட்சி கொறடா எழுந்தார், அவரையும் நான் அனுமதிக்கவில்லை (குறுக்கீடு) உங்களை மட்டும் இப்போது எப்படி அனுமதிக்கமுடியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அப்படி ஒரு முடிவு எடுப்பது உங்கள் விருப்பம் விதிகளுக்கு முரணாக வெளிநடப்பு செய்வது என்பது, எந்த வகையிலும் நியாயம் இல்லை. விதி 55-ன் கீழ் அரசு ஒரு அறிக்கை வைத்து இருக்கிறபோது அந்த அறிக்கையின் மீது, அறிக்கை வைக்கப்பட்ட நேரத்தில் எந்த விவாதமும் இருக்க முடியாது என்கிற விதி இருக்கிற போது சட்டமன்றத்தின் விதிகளை எதிர்த்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்றுதான் இதனுடைய பொருள். வேறு எந்த வகையிலும் இல்லை. சட்டமன்ற விதிகளை எதிர்த்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்றுதான் இதற்குப் பொருள். இதையும் அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ளுங்கள்.

5. அறிக்கை அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல்; திரு கி. தருமலிங்கம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறித்து 1985–86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு அளித்த அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் 7வது அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.